1974 மார்ச் 26]

6 இடங்களை சுற்றுலா வாரியம் அமைத்திருக்கிறது. இராமேஸ்வரம் தங்கும் விடுதியிலுள்ள அறைகளுக்கு வாடகை 10 ரூபாய், 15 ரூபாய், 20 ரூபாய் என்ற அளவுக்குத்தான் வரும். எந்த ஓட்டல்களிலும் 15 ரூபாய், 20 ரூபாய் வசூலிக்கப்படுகிறது. அதைப்போன்ற மதுரை, திருச்சி போன்ற இடங்களிலும் சுற்றுலா வாரியத்தின் சுற்றுலாப் பயணிகள் விடுதிகள் இருக்கின்றன.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், இராமேஸ்வரத்தில் கட்டப்பட்டிருக்கக்கூடிய சுற்றுலாப் பயணிகள் விடுதி சமுத்திரக் கரையை ஒட்டி இருக்கிறது. அங்கிருந்து சூரிய உதயத்தைப் பார்க்க வசதி இருக்கிறது. இதுவரையிலே ஜனங்கள் அங்கே நின்று சூரிய உதயத்தைப் பார்த்து வந்தார்கள். இனியும் அவர்கள் பார்ப்பதற்கு இடையூறு இல்லாமல், வசதி செய்து கொடுக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அதுபற்றிய நிலைமை தெரியவில்லை. தடங்கல் ஏற்படாமலிருக்க என்னென்ன ஏற்பாடுகளைச் செய்ய முடியுமோ, அவைகளைச் செய்யலாம்.

ஓமலூர் மருத்துவ மனையில் எக்ஸ்ரே பிரிவு.

*611 வினா—**திரு. வீ. செல்லத்துரை :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஓமலூர் மருத்துவ மனையில் "எக்ஸ்ரே" (X-ray) படங்கள் எடுக்கும் கருவி அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இல்லை.

டாக்டர் ம. மோசஸ் : தலைவரவர்களே, இப்போது எக்ஸ்-ரே இருக்கக்கூடிய ஆஸ்பத்திரிகளில் இந்த யூனிட் முழு நேரம் வேலை செய்யாமல் இருக்கிறது. எமர்ஜென்சி கேஸ்கள் வந்தால், உடனடியாக எக்ஸ்-ரே எடுத்து, சிகிச்சை செய்ய வேண்டியிருக்கிறது. அப்போது இந்த யூனிட் இயங்கவில்லையானால் உடனடியாக சிகிச்சை செய்ய முடியாது. உதாரணமாக சென்னையில் ஒரு ஆஸ்பத்திரியில் ஞாயிற்றுக்கிழமை மாலை ஒரு

இடத்தில் ஒரு ஆள் அடிபட்டு வருகிறார் என்றால், அது எமர்ஜென்சி கேஸாக இருந்தால் உடனடியாக எக்ஸ்-ரே எடுத்து சிகிச்சை செய்ய முடியாமல திங்கட்கிழமை காலைதான் எக்ஸ்-ரே எடுத்து பார்த்து சிகிச்சை செய்ய முடியும். இந்த நிலைமையைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, எமர்ஜென்சி கேஸ்கள் வருவதாக இருந்தால், ஓமலூர் போன்ற வட்டப் பகுதிகளிலே கூட எக்ஸ்-ரே யூனிட் இருந்தாலும், அதிலே பணியாற்றுபவர் உடனடியாக அழைக்கப்பட்டு தகுந்த சிகிச்சையை மேற்கொள்ளலாம். உடனடியாக சிகிச்சை செய்வது இயலாத காரியம் அல்ல. ஏதாவது குறை இருக்குமானால் அதை நிவர்த்தி செய்ய அரசு நடவடிக்கை எடுக்கும்.

மாயூரம் மருத்துவ மனையில் இரத்த சேமிப்பு நிலையம்.

*612 வினா—**திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் அரசினர் மருத்துவ மனையில் இரத்தம் சேமிப்பு நிலையம் எப்போது முதல் செயல்படத் துவங்கும்?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: மாதிரி நீர், ரத்த சேமிப்பு நிலையத்தின் உபயோகத்திற்கு உகந்ததாக இருக்கிறது என அண்மையில் செய்த இரசாயன, நுண்ணியல் சோதனைகளின் மூலம் முடிவாகிவிட்டது. ஆதலால் மாயூரம் அரசு மருத்துவ மனையில் குருதி சேமிப்பு நிலையம் வெகு விரைவில் துவங்கப்படும்.

Intensive Family Planning Programme

*613 Q.- THIRU A. PARANDHAMAN: Will the Hon. the Minister for Health be pleased to state whether there is any proposal under the consideration of the Government to continue the scheme of Intensive Family Planning drive during the year 1973–74 also?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: அதிக அளவு ஊக்கத் தொகையுடன் பெருமளவில் குடும்ப நலத் திட்ட அறுவை சிகிச்சை முகாம்கள் நடத்துவது இவ்வாண்டு கைவிடப்